முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி

**முன்னிலை :- திரு.கே.பாஸ்கர், பி.ஏ., பி.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**

திருவள்ளுவராண்டு, 2053 சுபகிருது வருடம், மார்கழி திங்கள், 26-ம் நாள்

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண். 2/2022 இன் அசல் வழக்கு எண். 289/2022**

(CNR No.TNTL110004102022)

உலகநாதன் --- மனுதாரர்/வாதி

/எதிர்/

வேலம்மாள் --- எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 10.01.2023 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.R.K.பாண்டியராஜ் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சிவசக்திவேலு அவர்களும் முன்னிலையாகியும், பின்னர் இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனு உறுதிக்கூற்றில் கண்டுள்ள காரணங்களினால், மனுதாரர், மனு தபசில் சொத்தினை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதி எவ்வகையிலும், எக்காலத்திலும், இடையூறு செய்யக்கூடாது என அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரருக்கு எதிராக தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம், கட்டளை 39, விதி 1, 2 மற்றும் பிரிவு 151 ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம் -

அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு தபசில் சொத்தின் காலிமனை முன்னர் ராமையா ஆசாரி மற்றும் அவரது மனைவி லெட்சுமி அம்மாள் ஆகியோருக்கு 27.09.1989 ம் தேதிய கிரைய ஆவண எண்.522/1990 மூலம் பாத்தியப்பட்டது. அதன்பின்னர், மேற்படியார்களிடமிருந்து 16.09.2005 ம் தேதிய கிரைய ஆவண எண்.2169/2005 மூலம் வாதி காலி மனையாக கிரையம் பெற்று, 2020 ம் ஆண்டில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார். மேற்படி வீடு கட்டும்போது மனு தபசில் சொத்தில் நான்கு பக்கமும் காலி மனையும், மத்தியில் வடக்கு பார்த்த வாசலும் விடப்பட்டுள்ளது. மனு தபசில் சொத்திற்கு அடுத்த தென்புறம் கிழமேலாக உள்ள பாதைக்கு அடுத்த தென்புறம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது.

(ii) எதிர்மனுதாரர் தனது வீட்டின் கழிவுநீரை மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்தில் தென்மேற்கு பகுதியில் வெளியேற்றி இடையூறு செய்து வருகிறார். அதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மனு தபசில் சொத்தில் எதிர்மனுதாரருக்கு எக்காலத்திலும், எந்தவித அனுபவமோ, உரிமையோ கிடையாது. எனவே, மனுதாரர், மனு தபசில் சொத்தினை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதி எவ்வகையிலும், எக்காலத்திலும், இடையூறு செய்யக்கூடாது என அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரருக்கு எதிராக தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இந்த இடைக்கால மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் -

இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை. இம்மனுவில் மனுதாரர்/வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரர் 2020 ல்

வீடு கட்டியுள்ளதாக கூறியுள்ள நிலையில், மேற்படி வீடு கட்டுவதற்காக நகராட்சியில் கட்டிட வரைபட அனுமதி பெற்றதற்கான எந்தவித விவரங்கள் மனுவில் கூறப்படவில்லை. பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் தபசில் சொத்தின் கிழமேல் தென்வடல் அளவுகள் குறித்து தெளிவாக விவரிக்கப்படவில்லை. பிராது மற்றும் மனுவில் தபசில் சொத்திற்கு அடுத்த தென்புறம் கிழமேலாக உள்ள பாதைக்கு அடுத்த தென்புறம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வீடு இருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளது உண்மையல்ல. உண்மையில், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு மேல்புறம் கிழமேல் 9 அடியும், தென்வடல் 106 அடியும் உள்ள மொத்தம் 954 சதுர அடி உள்ள மனை எதிர்மனுதாரருக்கு 2018 ம் ஆண்டு கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறார்.

(ii) எதிர்மனுதாரரின் கிரைய ஆவணத்திலும் எதிர்மனுதாரரின் முன்பாத்தியஸ்தரின் 1993 ம் வருடத்திய கிரைய ஆவணத்திலும், தபசில் சொத்து விபரத்தில் இசக்கியாபிள்ளை வகையறா இடத்திற்கும் மேற்கு என்றும், வடபக்க எல்கையாக ரா.முத்துபிள்ளை வகையறா இடமும் எல்கை மாலாக காட்டப்பட்டுள்ளது. மனுதாரரின் கிரைய ஆவணத்திலும் வடபக்க எல்கையாக ரா.முத்துப்பிள்ளை வகையறா மனை என்றும், மேல்பக்க எல்கையாக எதிர்மனுதாரரின் முன்பாத்தியஸ்தரான சுப்பையாபிள்ளை வகையறா மனை என்றும் எல்லைமால் காட்டப்பட்டுள்ளது. மேற்படி விபரங்களிலிருந்து பிராது மற்றும் மனு தபசில் சொத்து விவரங்களும், பிராதுடன் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடமும் முரண்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) எதிர்மனுதாரர் தான் கிரையம் பெற்றுள்ள மனையின் தென்பகுதியில் வீடு கட்டியும், வடபகுதியை காலிமனையாகவும் அனுபவித்து வருகிறார். அதில் மனுதாரர் 2020 ம் ஆண்டு ஜுன் மாதத்தில் வீடு கட்ட செய்தபோது, எதிர்மனுதாரர் கோவிட் நோய் பெருந்தொற்று காரணமாக தனது மகள் வீட்டிற்கு சென்றிருந்த சமயத்தில் மனுதாரர் தனது இடத்திற்கு மேல்புறம் உள்ள எதிர்மனுதாரருக்கு

பாத்தியப்பட்ட இடத்தினையும் சேர்த்து ஆக்கிரமித்து வீடு கட்டி முடித்துவிட்டார். இதுசம்பந்தமாக காவல்துறையில் புகார் அளிக்கப்பட்ட நிலையில், மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்த பகுதியினை இடித்து அப்புறப்படுத்தி தருவதாக கூறி காலம் தாழ்த்தி வருகிறார். மேற்படி சட்டவிரோத செயலை மறைப்பதற்காகவும், காவல்துறை விசாரணை மற்றும் நடவடிக்கைகளிலிருந்து தப்பிப்பதற்காகவும் எதிர்மனுதாரர் மீது பொய்யான சங்கதிகளைக் கூறி அசல் வழக்கு மற்றும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் பிராது மற்றும் மனுவில் கூறியுள்ளது போல் எதிர்மனுதாரர் தனது வீட்டு கழிவு நீரை மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு விடவில்லை, எவ்வித சுகாதார சீர்கேடும் எற்படவுமில்லை. ஆகவே, மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில், இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இம்மனுவில் மனுதாரர்/வாதி தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

6. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.

<u>7. **தீர்வு** -</u>

மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், பிராது தபசில் சொத்தை காலி மனையாக 27.09.1989ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி ராமையா ஆசாரி மற்றும் அவரது மனைவி லெட்சுமி அம்மாள் ஆகியோர்கள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், அதன்பிறகு, 16.09.2005ம் தேதியிட்ட கிரைய

ஆவணத்தின்படி மனுதாரர்/வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றும், மனுதாரர்/வாதி தான் கிரையம் பெற்ற இடத்தில் 2020 ல் வீடு கட்டினார் என்றும், அவ்வாறு வீடு கட்டும்போது நான்கு பக்கமும் காலி மனையாக விடப்பட்டது என்றும், மனு தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் கிழமேல் பாதை உள்ளது என்றும், மேற்கண்ட பாதைக்கு தெற்கு பக்கம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தன்னுடைய வீட்டின் கழிவு நீரை மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட பிராது தபசில் சொத்தின் மேற்கு பகுதியில் வெளியேற்றி இடையூறு செய்து வருகிறார் என்றும், இதனால், சுகாதார கேடு விளைகிறது என்றும், எனவே, அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட பிராது தபசில் சொத்தில் கழிவு நீரை விட்டு இடையூறு செய்யக்கூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த இடைக்கால மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட 27.09.1989 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் ம.சா.ஆ.1 ஆகவும், 16.09.2005 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் ம.சா.ஆ.2 ஆகவும், வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் ம.சா.ஆ.3 ஆகவும், புகைப்படங்கள் மற்றும் வீட்டு வரி ரசீதுகள் முறையே ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இந்த இடைக்கால மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதம் செய்தார்.

8. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர்/வாதி வீடு கட்டுவதற்கு நகராட்சி கட்டிட அனுமதி வாங்கியதாக மனுவில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், அதேபோல், மனு தபசில் சொத்து மற்றும் பிராது தபசில் சொத்து ஆகியவற்றின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றும், இந்த இடைக்கால மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் மனு தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள கிழமேல் ரோட்டுக்கு தெற்கு பக்கம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள சங்கதி உண்மையல்ல என்றும், உண்மையில், மனு தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட காலி இடம் உள்ளது என்றும், மேற்கண்ட காலி இடம் தென்வடல் 106 அடி, கிழமேல் 9 அடி ஆக

மொத்தம் 954 சதுர அடி அளவு கொண்டது என்றும், இந்த இடத்தை எதிர்மனுதாரர்/பிரதிவாதி எ.ம.சா.ஆ.1ன் மூலமாக கிரையம் பெற்றுள்ளார் என்றும், ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 ஆவணங்களைப் பார்வையிட்டால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட காலி மனை மனு தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள விவரம் தெரியவரும் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடு கட்டுவதற்கு முயற்சி செய்தபோது கோவிட் - 19 காரணமாக எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவரது மகள் வீட்டிற்கு சென்றிருந்த சமயத்தில் மனுதாரர்/வாதி 2020ல் வீடு கட்டும்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டி விட்டார் என்றும், இதுகுறித்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி நடவடிக்கை எடுத்தபோது பொய்யான சங்கதிகளைக் குறிப்பிட்டு இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனு தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள இடம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்ற சங்கதி எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 ஆவணங்களின்படி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, இந்த இடைக்கால மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், அதேபோல், இந்நீதிமன்றம் 23.11.2022ல் மனுதாரர்/வாதிக்கு வழங்கிய தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் வாதம் செய்தார்.

9. இந்நீதிமன்றமானது அசல் வழக்கின் ஆவணங்களை பார்வையிட்டபோது, அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த இடைக்கால மனுவும் அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டும் என கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. இந்த இடைக்கால மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 23.11.2022ல் வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், பிராது தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள தெருவிற்கு தெற்கு பக்கம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றும், மேற்படி

வீட்டிலிருந்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனு தபசில் சொத்திற்கு தென்மேற்கு பகுதியில் கழிநீரை வெளியேற்றி மனுதாரர்/வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்வதோடு மட்டுமல்லாமல் சுகாதார கேட்டையும் விளைவிக்கிறார் என வாதம் செய்யப்பட்டதால் மனுதாரர்/வாதியின் நலனைக் கருத்தில்கொண்டதோடு மட்டுமல்லாமல் சுகாதார கேடு எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் விளைவிக்கப்படுகிறது என மனுதாரர்/வாதி தரப்பில் செய்யப்பட்ட வாதத்தைக் கருத்தில்கொண்டு பொது நலன் கருதியும் மனுதார்/வாதியால் கோரப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டது.

11. இந்நிலையில், இந்த இடைக்கால மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் மற்றும் வழக்குரையின் பிராது தபசில் சொத்து மற்றும் இம்மனுவின் தபசில் சொத்து ஆகியவற்றை பார்வையிட்டபோது, மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் குறிப்பிடப்படவில்லை. மேலும், இந்நீதிமன்றமானது ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஐ பார்வையிட்டபோது, மனுதாரர்/வாதியின் முன்பாத்தியஸ்தர்களான ராமையா ஆசாரி மற்றும் லெட்சுமி அம்மாள் பெயரிலுள்ள கிரைய ஆவணம் என்பதும், மனுதாரர்/வாதி பெயரிலுள்ள கிரைய ஆவணம் என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

12. மேற்படி கிரைய ஆவணங்களின் நான்கு மால் விவரங்களை பார்வையிட்டபோது, மனு தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் சுப்பையா பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்ட காலி இடம் உள்ளது என்றும், மேற்கண்ட சுப்பையா பிள்ளைக்கு பாத்தியப்பட்ட காலி இடம் எ.ம.சா.ஆ.3 ன்படி பாக உடன்படிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட பாக உடன்படிக்கை ஆவணத்தில் சுப்பையா பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்தானது எ.ம.சா.ஆ.1 ன்படி சீதையம்மாள் வகையறாக்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் என்பதும், மேற்கண்ட சீதையம்மாள் வகையறாக்கள் 14.03.2018 ம் தேதியில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு கிரைய ஆவணத்தை பிறப்பித்துக் கொடுத்துள்ளார்கள் என்பதும், மேற்கண்ட ஆவணங்களில் கிழக்கு பக்க எல்கையாக மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட காலி

மனை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள விபரம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

13. மேற்படி விபரப்படி, மனுதாரர்/வாதி இந்த இடைக்கால மனுவின் சொத்து விபரத்திலும், பிராது தபசில் சொத்தின் விவரத்திலும் மேற்கு பக்க மாலாக எதிர்மனுதார்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனை என குறிப்பிடுவதற்கு பதிலாக சுப்பையா பிள்ளை வகையறாக்கள் மனை என குறிப்பிட்டுள்ளார்.

14. மேற்கண்ட சங்கதிகளிலிருந்து எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து மனு தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் இருப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மேற்படி காலி இடத்தில் கழிவுநீரை வெளியேற்றுவதற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு உரிமை உள்ளது. ஆனால், மேற்கண்ட சங்கதிகளை மறைத்து மனு தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் சுப்பையா பிள்ளைக்கு பாத்தியப்பட்ட காலி மனை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

15. மேலும், மனு தபசில் சொத்தின் மேற்கு பக்கம் உள்ள எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட காலி இடத்தில் 2020 ல் வீடு கட்டும்போது மனுதாரர்/வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும், இது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்மனுதாரர்/பிரதிவாதி முயற்சி செய்தபோது பொய்யான சங்கதிகளைக் குறிப்பிட்டு மனுதாரர்/வாதி இந்த இடைக்கால மனுவினை தாக்கல் செய்துள்ளார் என எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட வாதமானது வழக்கு ஆவணங்களிலிருந்தும், உபயதரப்பினர்களால் செய்யப்பட்ட வாத உரை மற்றும் வாதுரையின்படியும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

16. எனவே, மனுதாரர்/வாதிக்கு முதல் நோக்கு நிலையும், சம நிலை வாய்ப்பும் இல்லை என்பதும், இந்த இடைக்கால மனு அனுமதிக்கப்பட்டால் அது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கே ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

17. எனவே, நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த இடைக்கால மனுவானது தள்ளுபடி செய்யப்படுவதே உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. எனவே, இந்நீதிமன்றமானது 23.11.2022 ல் மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக வழங்கிய தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமானது ரத்து (Vacated) செய்யப்படுகிறது.

19. முடிவாக, இந்த இடைக்கால மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

20. மேற்கண்ட விவாதமானது இந்த இடைக்கால மனுவினை தீர்மானிப்பதற்காக மட்டுமே கவனத்தில்கொள்ளப்படுகிறது. மாறாக, இந்த வாதமானது அசல் வழக்கின் விசாரணையின்போது எந்த காலகட்டத்திலும் கவனத்தில்கொள்ளப்படமாட்டாது என்ற உரிமையை உபயதரப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**முடிவாக, இந்த இடைக்கால மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, விரிவாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 10.01.2023 ம் தேதியன்று அவையறிய பகரப்பட்டது.

**ஒம்./- திரு. கே. பாஸ்கர்,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**தென்காசி.**

**மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் -**

இல்லை

**மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் -**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 27.09.1989 | ராமைய்யா ஆச்சாரி மற்றும் லெட்சுமி அம்மாள் ஆகியோர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் (ஆவண எண்.522/1990) --- அசல் |
| ம.சா.ஆ.2 | 16.09.2005 | ராமையா ஆச்சாரி மற்றும் லெட்சுமியம்மாள் ஆகியோர் மனுதாரர்/வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் (ஆவண எண்.2169/2005) --- அசல் |
| ம.சா.ஆ.3 | --- | உத்தேச வரைபடம் |
| ம.சா.ஆ.4 | --- | தபசில் சொத்தைக் காட்டக்கூடிய புகைப்படங்கள் --- 4 எண்ணம் |
| ம.சா.ஆ.5 | --- | மனுதாரர்/வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள் அசல் எண்ணம் 5 |

**எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் -** இல்லை

**எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் -**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 14.03.2018 | வேலம்மாள் என்பவருக்கு சீதாலட்சுமி வகையறாக்கள் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் (ஆவண எண்.984/2018) --- ஒளிநகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ. 2 | 24.11.1993 | சீதையம்மாள் வகையறாக்களுக்கு ராஜம்மாள் என்பவர் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ. 3 | 03.03.1988 | பாக உடன்படிக்கை ஆவணம் (ஆவண எண்.107/1988) --- சான்றளிக்கப்பட்ட நகல் |

**ஒம்./- திரு. கே. பாஸ்கர்,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தென்காசி.**